விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 155 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (23.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழர்களின் நிலங்களை திருடியே தையிட்டியில் விகாரை அமைப்பு

### நயினாதீவு ரஜமஹா விகாரை விகாராதிபதி

(நயினாதீவு)

தையிட்டி விகாரை தமிழர் நிலங்களை களவெடுத்து கட்டிய விகாரை என்று நயினாதீவு ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருட போர்க் காலத்திலும் சிங்களவர்களிற்கு எவ்வித பிரச்சினையும் காணப்படவில்லை. தென் இலங்கைவாழ் மக்களுக்கு உண்மை தெரியாது.

ஆரம்ப காலகட்டத்தில் இருந்தவர்கள் தனி தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லர் எனவும் ஈ.பி. 11

## தையிட்டியிலுள்ள விகாரையை அகற்றக்கோரி மீண்டும் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

யாழ்.தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரையை அகற்ற கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்பாட்டில் நேற்று மீண்டும்போராட்டம் நடைபெற்றது. 11

## இருவேறு இடங்களில் துப்பாக்கிச் சூடு



### இருவர் உயிரிழப்பு

(கம்பஹா)

கம்பஹா மினுவாங்கொடை பொலிஸ் பிரிவில் நேற்று பிற்பகல் ஓட்டோ சாரதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற குறித்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். 11

## தொடரும் ஆக்கிரமிப்பு

# மன்னார் உயிலங்குளத்திலும் விகாரை அமைக்க முயற்சி

**(மன்னார்)**

**மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவினால் அப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

தொடர்ச்சியாக, மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகளே காரணங்களாக உள்ளன.

மன்னாரில் ஏற்கெனவே 5 11



## ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரிப்பு

### மத்திய வங்கி

(கொழும்பு)

இலங்கை ரூபாயின் பெறுமதி 18.7 வீதத்தால் அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இம்மாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது. 11

## மக்களின் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அவற்றுக்கு தீர்வு காண்பேன்

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மக்களின் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அவற்றுக்கான தீர்வினை பெறுவதற்கு முயல்வேன் என தனது கடமைகளை பொறுப்பேற்ற புதிய ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

தனது அலுவலகத்தில் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை ஆரம்பித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

மத குருமார் சில 11

## கடமைகளைப் பொறுப்பேற்றார் வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்



11

## தென் மாகாணத்தில் விசேட சுற்றிவளைப்பு 84 பேர் சிக்கினர்

(காலி)

தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் பெண்கள் இருவர் உட்பட 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 19 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் 11

## உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் நிலஅளவை முயற்சி தடுத்து இடைநிறுத்தம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, உருத்திரபுரீஸ்வரர் ஆலய வளாகத்தில் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட நில அளவை, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்த நடவடிக்கையால் நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை தொடர்பாக ஆலய 11

## ஜனாதிபதி இன்று சிங்கப்பூர் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் மற்றும் ஜப்பானிற்கு 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

23.05.2023




**திருமதி சிவசோதி துரைராசா B.A Dip SLTS - I**

**சேவைக்காலம்**

- மு/ பாண்டியன் குளம் மகா வித்தியாலயம் 20.01.1989 - 14.11.1992
- இரணைப்பாலை மகா வித்தியாலயம் 15.11.1992 - 31.12.1999
- ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை 01.01.2000 - 17.01.2012
- கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம் 18.01.2012 - 03.01.2016
- கைவேலி கணேச வித்தியாலயம் 04.01.2016 -10.01.2021
- கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம் 11.01.2021 - 22.05.2023

33 ஆண்டு கால ஆசிரிய சேவையை நிறைவு செய்யும் உங்களை நாம் மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்

(C-6601)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/ கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம்
புதுக்குடியிருப்பு

## மாணவியிடம் சேட்டை செய்த இராணுவ சிப்பாய் நையப்புடைப்பு

யாழ்.வசாவிளான் பகுதியில் வீதியால் சென்ற பாடசாலை மாணவியிடம் சேட்டையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாயை அப் பகுதி மக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்று திங்கட்கிழமை மதியம் குறித்த சம்பவம் இடம்பெற்றநிலையில் சம்பவம் தொடர்பில் பலாலிப் பொலிஸார் மற்றும் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிமையில் சென்ற பாடசாலை மாணவியை பின் தொடர்ந்த குறித்த இராணுவ சிப்பாய் சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது மாணவி குரலெழுப்பிய நிலையில் அங்கு கூடிய பொது மக்கள் குறித்த இராணுவ சிப்பாயை நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

(4.7.9)



## புனித பிலிப்பு நேரியார் ஆலயம், செம்பியன்பற்று

- 2023.05.17 மாலை 5.30 மணிக்கு புனித பிலிப்பு நேரியாரின் திருநாளுக்கான திருக்கொடியேற்றம் ஆரம்பமாகியது.
- 2023.05.25 (வியாழக்கிழமை) மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் நற்கருணை விழாத்திருப்பலி இடம்பெறும்.
- 2023.05.26 (வெள்ளிக்கிழமை) காலை 6.00 மணிக்கு திருச் செபமாலையுடன் புனிதரின் திருநாள் திருப்பலி இடம்பெறும்.
- 2023.05.26 அன்று மாலை 6.00 மணியளவில் 'மரியதாசன்' நாட்டுக்கூத்தும் இடம்பெறும்.

**இத்திருவிழாவிற்கு அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அன்புடன் அழைத்து நிற்கும்
செம்பியன்பற்று பங்குத்தந்தை,
ஆலய அருட்பணி சபையினர் மற்றும் பங்கு மக்கள்.

(15597)

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 04 . 1994

மறைவு 21 . 05 . 2023

## யோகராசா யோதீஸ்

பத்தானை விதி தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகராசா யோதீஸ் அவர்கள் (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகராசா மற்றும் உதயராணி தம்பதியரின் அன்பு மகனும் உமாந்தினி, அரவிந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோணேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற உமாமகேஸ்வரன் (ஜேர்மன்), தர்மராஜா, சண்முகராசா, நகுலேஸ்வரன், வசந்தராணி ஆகியோரின் அன்பு மருமகனும், சிவபாக்கியம் - ஆறுமுகராசா, பகவதி - அருளை நாயகம் ஆகியோரின் அன்பு பேரனும் மஞ்சுளாதேவி, ஸ்ரீசதானந்த நாயகம், ஸ்ரீசர்வானந்தநாயகம் ஆகியோரின் ஒன்றுவிட்ட மகனும் ஹர்ஷன், வினோஷன், கிஷோயானி, டெனோசன், ஹரி, சர்மி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.05.2023 இன்று காலை 10.00 மணியளவில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

(C-6603)

# மரண அறிவித்தல்

## திருமதி சச்சிதானந்தம்பிள்ளை கோகுலநாயகி



தோற்றம் 29.05.1941

மறைவு 22.05.2023

சிவன் கோவிலடி வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோகுலநாயகி சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் 22.05.2023 நேற்று திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா (ஓய்வுபெற்ற அதிபர்) - திருமதி தங்கரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியரின் அருமை மகளும், காலஞ் சென்றவர்களான முருகுப்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதிகளின் அருமை மருமகளும் சச்சிதானந்தம்பிள்ளையின் அன்பு மனைவியும் மற்றும் திருமதி வேதரஞ்சனி (ஆசிரியை - மிருசுவில் அ.த.க. பாடசாலை), செல்வி ஸ்ரீரஞ்சினி (ஆசிரியை - வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வரத்தினத்தின் அருமை மாமியாரும் திருமதி சற்குணநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி சடாச்சரநாயகி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - இறைவரித் திணைக்களம்), காலஞ்சென்ற கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற உ.கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற வரிசிலைநாயகி, திருமதி கடாச்சரநாயகி, காலஞ்சென்ற செந்தில்நாதன் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), திருமதி கிரிசைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருசசிதரநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பரமநாதன், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், சாந்தநாயகி, பரமானந்தசிவம், நடராசா, ஜெயானந்தம் மற்றும் மீனாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை), சந்திரவதனி, கமலவேணி, வேதாந்தசிவம், அரசகுல்ராணி, அஞ்சலிதேவி, காலஞ்சென்ற அற்புத நாதன் மற்றும் கலைஅரசி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற இராச ரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற புவனசுந்தரம் (ஓய்வுபெற்ற இ.போ.ச சாலைப் பரிசோதகர்), கிருபானந்தராசா (லண்டன்), தயாளன், பரிபூரணதேவி, ஆனந்தி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2023) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(15714).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் நடந்தது இனப்படுகொலையே

# படுகொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் வைகோ

**(சென்னை)**

**"இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு காரணமான சிங்கள அரசு தண்டிக்கப்பட வேண்டும்" என மறுமலர்ச்சி தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**



தமிழகத்தில் பெசன்ட் நகர் கடற்கரையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ கடந்த வருடம் கனடா பாராளுமன்றில் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து ஒருமனதாக தீர்மானம் ஒன்றினை கனடா பாராளுமன்றில் நிறைவேற்றினார்.

ஆத்திரமுற்ற சிங்கள அரசு கனடா நாட்டு தூதுவரை அழைத்து 'எங்கள் நாட்டு பிரச்சினையில் நீங்கள் இப்படி தலையிடுக்கின்றீர்கள் என்று தங்களுடைய கண்டனத்தை தெரிவித்தார்கள்' ஆனால் கனடா அதற்கு அசைந்து கொடுக்கவில்லை.

எப்படி அல்பேனியாவில் நடந்த படுகொலைக்கு ஜேர்மனிய பாராளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ, அதேபோல கனடா பாராளுமன்றில் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலையே என கனடா சுட்டிக்காட்டியது போல உலகத்தில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இந்த இனப்படுகொலையை சுட்டிக்காட்டி இந்த படுகொலைக்கு காரணமான சிங்கள அரசுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அது உலகம் முழுவதும் நடத்தப்பட வேண்டும். அதுவே நாம் தீர்வாக வைத்திருக்கின்றோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## இலங்கையில் எரிபொருள் விற்பனை

### சினோபெக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வது தொடர்பில் சீனாவின் சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நேற்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இலங்கையில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான இந்த நீண்டகால ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டுள்ளது.

சினோபெக் ஃப்யூயல் ஒயில் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் சீனா, சிங்கப்பூரில் உள்ள அதன் தாய் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

## கிழக்கு ஆளுநர்-சுமந்திரன் சந்திப்பு



(கொழும்பு)

கிழக்கின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை குறித்த கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. (நி)

## சாதாரணதர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகளுக்குத் தடை

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பிரத்தியேக மற்றும் மேலதிக வகுப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் மேலதிக வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளுக்கும் தடை விதிக்கப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதற்கு மேலதிகமாக, மாதிரி வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிடுதல், விநியோகித்தல், பதாகைகள், கையேடுகள், இலத்திரனியல் அல்லது அச்சிடப்பட்ட ஊடகங்கள் மூலம் பரீட்சை வினாக்களை விளம்பரப்படுத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ இந்த உத்தரவை மீறினால் அது குறித்து முறைப்பாடு செய்ய முடியும் என பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி)

## இலங்கை ஆசிரியர் கல்விச் சேவை அதிகாரிகள் இன்று அடையாள வேலை நிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் கல்வி சேவை அதிகாரிகள் இன்று சுகயீன விடுமுறையில் சென்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளனர். பதவி உயர்வு, சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட 9 கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக இலங்கை கல்வி சேவை உத்தியோகத்தர்களின் ஐக்கிய தொழிற்சங்க சங்கத்தின் செயலாளர் சவன திலக்க கஜதீர தெரிவித்தார். (நி)

## பெரும்பாலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைய தயார் நிலையில்

(கொழும்பு)

எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைய தயாராக உள்ளார்கள் என பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த வேளை அரசாங்கத்தை ஏற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட பாராளுமன்றத்தில் உள்ள சகல எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆனால் பயம் என்பதால் எவரும் தற்துணிவுடன் செயற்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபந்தனையற்ற வகையில் அரசாங்கத்தை பொறுப்பேற்க முன்வந்ததால் அவருக்கு முழுமையான ஆதரவு வழங்கினோம்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் அரசியல் கொள்கையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் அரசியல் கொள்கைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்கிறார். குறுகிய காலத்துக்குள் நாடு வழமைக்கு திரும்பியுள்ளது.

பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வு கண்டுள்ள பின்னணியில், எதிர்க்கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் ஒன்றிணைய தயாராக உள்ளார்கள் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெயிலின் சாதனையை முறியடித்த விராட்கோலி



குஜராத் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய விராட்கோலியும் டூ பிளெஸிஸ் ஆகியோர் சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர்.

ஆனால் மிடில் ஓவரில் ரஷித் கான், நூர் ஆகியோர் சிறப்பாக பந்து வீச டூ பிளெஸிஸ், மேக்ஸ்வெல் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். இதனால் ஆர்.சி.பி அணிக்கு சிக்கல் ஏற்பட்டது.

ஆனால் விராட்கோலி தன் னம் பிக் கையுடன் விளையாடினார். அரை சதம் அடித்த அவர் அதிரடியாக விளையாடி சதம் விளாசினார். இதன் மூலம் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் அவர் தனது ஏழாவது சதத்தை பதிவு செய்தார்.

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் இதுவரை யாரும் ஏழு சதங்கள் அடித்தது கிடையாது. ஆகவே, ஐ.பி.எல் கிரிக்கெட்டில் அதிக சதம் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். யுனிவர்ஸ் பாஸ் என அழைக்கப்படும் கெய்ல் 6 சதங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்து பேட்ஸ் மேன் ஜோஸ் பட்லர் 5 சதங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். (6)

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் கடைசி லீக் ஆட்டம் சின்னசாமி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் ஆர்.சி.பி- குஜராத் அணிகள் மோதின. இந்த போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே பிளே ஆப் சுற்றுக்கு முன்னேற முடியும் என்ற நிலையில் ஆர்.சி.பி களம் இறங்கியது. டாஸ் வென்ற

# ஐ.பி.எல் தொடரின் இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் அணி எது?

## சென்னை குஜராத் அணிகள் இன்று பலப்பரீட்சை


10 அணிகள் பங்கேற்ற 16 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் திருவிழா கடந்த மார்ச் 31 ஆம் திகதி தொடங்கியது.

அன்றிலிருந்து நாள் தோறும் இடைவிடாது ஆட்டங்கள் நடந்து வந்தது. நேற்று முன்தினம் 70 ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டம் அரங்கேறியது.

இந்த லீக் ஆட்டத்தின் முடிவில் குஜராத், சென்னை, லக்னோ, மும்பை ஆகிய நான்கு அணிகள் பிளே-ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

லீக் சுற்று நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில் இன்று மற்றும் நாளை பிளே-ஆப் போட்டிகள் நடைபெறுகிறது.

இதனால், நேற்று போட்டிகள் எதுவும் நடைபெறாமல் ஓய்வு நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை சேப்பாக்கத்தில் இன்று (செவ்வாய்க் கிழமை) நடக்கும் இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றில் நடப்பு சம்பியன் குஜராத் டைட்டன்சும், சென்னை சூப்பர் கிங்சும் மோதுகின்றன.




நாளை வெளியேற்றுதல் சுற்று (எலிமினேட்டர்) ஆட்டத்தில் லக்னோ-மும்பை அணிகள் சந்திக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2834

கவின்




மிதுன்




சாளினி




லது




தயா




கீர்த்தி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மக்கள் அதிகம் வாழும் அக்கராயன் பகுதியிலுள்ள மதுபானசாலையை இடமாற்றுமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் பொதுமக்கள் குடியிருப்புக்கு மத்தியில் அமைத்து இருக்கின்ற மதுபான சாலையை இடமாற்றுமாறு பிரதேச பொது அமைப்புக்கள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் குறித்த மதுபானசாலையை இடமாற்றக் கோரி நேற்று முன்தினம் ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் முறையான அனுமதிகள் இன்றி மதுபான சாலை அமைக்கப்பட்டு இருப்பது தொடர்பில் பிரதேச மக்கள் குறித்த மதுபானசாலையை பொருத்தமான இடத்துக்கு மாற்றம் செய்து கொள்ளுமாறும் பிரதேச பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருவதாகவும் இதனை இடமாற்றுமாறு கோரி பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை மதுவரித்திணைக்களம் உள்ளிட்டவற்றுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-6-315)

## பாக்குத் தெண்டலுடன் ஆரம்பமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம்

(தருமபுரம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் ஆரம்ப உற்சவமான பாக்குத் தெண்டல் உற்சவம் நேற்று அதிகாலை சிறப்பாக இடம்பெற்றது.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் மடை பரவி வழிபாடுகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து ஆலயத்துடன் பாரம்பரியமாக தொடர்புடைய குடும்பங்களிடம்சென்று இந்த பாக்குத் தெண்டல் உற்சவம் இடம்பெற்றது.

பாரம்பரிய தெய்வமாகிய வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை அறிவிக்கும் முகமாக ஆலயத்துடன் பாரம்பரியமாக தொடர்புகளை கொண்ட குடும்பங்களின் வீடுகளுக்கு சென்று தெரிவிக்கும் சம்பிரதாய உற்சவமாக இது இடம்பெறுகிறது.

பொங்கல் வருகை தர இருக்கின்றது என்பதை அறிவித்து இடம்பெறும் இவ் உற்சவத்தை அடுத்து 7 ஆம் நாள் முல்லைத்தீவு பெருங்கடலில் தீர்த்தம் எடுத்து வந்து உப்பு நீரிலே விளக்கேற்றி பொங்கல் உற்சவம் இடம்பெறும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின் தீர்த்தம் எடுக்கும் உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி அன்று இடம்பெறவுள்ளதோடு காட்டாவிநாயகர் ஆலய பொங்கல் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி அன்றும் வற்றாப்பளை கண்ணகிஅம்மன் ஆலய வருடாந்த பொங்கல் மறுநாளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)


## NSB பகிரங்க ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 31.03.2022 இற்கு முன்பு அடகு வைக்கப்பட்டு, கீழ்குறிப்பிடப்படும் திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 10.06.2023 தொடக்கம் 18.06.2023 வரையான காலப்பகுதியில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

| | கிளை | அடகு மீட்கப்பட வேண்டிய முடிவுத் திகதி | பகிரங்க ஏலம் நடைபெற உள்ள திகதி | ஏலம் நடைபெறவுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 01. | கொடிகாமம், சாவகச்சேரி, கிளிநொச்சி. | 08.06.2023 | 10.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி கொடிகாமம் |
| 02. | முல்லைத்தீவு, மல்லாவி. | 08.06.2023 | 10.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி முல்லைத்தீவு |
| 03. | சுன்னாகம், காரைநகர், சங்கானை, மானிப்பாய். | 08.06.2023 | 11.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் |
| 04. | வவுனியா. | 08.06.2023 | 11.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி வவுனியா |
| 05. | நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை. | 15.06.2023 | 17.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி நெல்லியடி |
| 06. | மன்னார், வங்காலை. | 15.06.2023 | 17.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி மன்னார் |
| 07. | யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் II ஆம் கிளை, ஊர்காவற்றுறை, திருநெல்வேலி, கோப்பாய். | 15.06.2023 | 18.06.2023 | தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் |

ஏலத்தை ஒத்தி வைக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

**வடபிராந்திய முகாமையாளர்,**
**தேசிய சேமிப்பு வங்கி.**

(15703)



கோடீஸ்வரராகும் கனவு இனியும் கனவாகாது

கொவிசெத Govisetha

ஏப்ரல் மாதத்தில் மட்டும் பத்து இலட்சம் வென்ற
இலட்சாதிபதிகள் 8 பேர்
இலட்சாதிபதிகள் 123 பேர்



அடுத்த அதிர்ஷ்டசாலி நீங்களா?
அதிர்ஷ்டத்தால் வாழ்வினை மலரச் செய்திடும் கொவிசெதவை அதிகமதிகமாக வாங்கிடுங்கள்

NLB தேசிய லொத்தர்

(C-2011)


## இராசிபலன்

23.05.2023
வைகாசி 09, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 01.03 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 12.55 மணிவரை
சுபநேரம் -10.22-11.52 மணிவரை
இராகுகாலம்-2.52-4.22 மணிவரை
சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை

**வளவன்**

**மேஷம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**கடகம்** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்து செலவுகளால் திணறுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்** தடைகளைத் தாண்டி முன்னேற்றம் காணும் நாள், விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**ரிஷபம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும், செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** வழிபாட்டடுச் சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமேவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறும், நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**எதிலும் எப்போதும் மிகவும் கவனத்துடன் இருந்தால் தான் வெற்றிவரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு – பெருங்காடு

# கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பெருங்காடு-கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா வும் அன்று இரவு 7 மணிக்கு திருவூஞ்சல் இடம்பெற்று கொடி யிறக்கமும் இடம்பெறும். (நி-6)

கலாநிதி.கா.இந்திரபாலாவின்

# தொல்லியல் அருங்காட்சியகம் திறப்பும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி.கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சி யகம் திறப்பு விழாவும் கண் காட்சியும் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் தலைமை யுரையினை வரலாற்றுத் துறைத் தலைவர் திருமதி. சாந்தினி அருளானந்தமும் அறிமுக உரையினை யாழ். பல்கலைக்கழக வரலாற் றுத்துறை ஓய்வுநிலை சிரேஷ்ட பேராசிரியர் பரமு. புஷ்பரட்ணமும் பீடாதிபதி உரையினை யாழ்.பல்க லைக்கழக கலைப்பீட பேரா சிரியர் சி.ரகுராம் ஆற்றவுள் ளதுடன் துணைவேந்தர் உரையினை யாழ்.பல்க லைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குண ராஜாவும் நன்றியுரையினை யாழ்.பல்கலைக்கழக தொல் லியல் வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.சிவரூபி சஜிதரன் ஆகியோரும் ஆற்றவுள்ள னர்.

இதனைத் தொடர்ந்து கலா நிதி.கா.இந்திரபாலா தொல் லியல் அருங்காட்சியகம் திறப்பும் கண்காட்சியும் இடம்பெறவுள்ளன. (நி-6)



குருநகர் திருத்துவ சின்னஞ்சிறுசுகள் முன்பள்ளியின் வருடாந்த கண்காட்சிவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜானகி தர்மசீலன் கலந்து சிறப்பித்தார்.

வண்ணை-கோட்டையம்பதி

# ஸ்ரீ சிவசுப்பிரமணியர் சுவாமி தேவஸ்தான மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-கோட்டையம் பதி ஸ்ரீ சி வசுப்பிரமணியர் சுவாமி தேவஸ்தான மஹோ ற்சவ விஞ்ஞாபனம்-2023 கட ந்த 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினை ந்து தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் ஜூன் மாதம் 1 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடி இறக்கமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை யினர் அறிவித்துள்ளனர். (நி-6)

# வலி.மேற்கு பகுதியில் சுமைதாங்கி புனரமைக்கப்பட்டு திறந்து வைப்பு




(அராலி)

வலி. மேற்கு பிரதேச சபை யின் பிரதான அலுவலகத்திற்கு அருகே உள்ள சுமைதாங்கி புனரமைக்கப்பட்டு நேற்று திற ந்து வைக்கப்பட்டது.

இந்த சுமைதாங்கி என்பது முன்னோர்களால் அமைக்கப் பட்டது. வீதியால் செல்லும்போது களைப்பு ஏற்பட்டால் பொருட் களை சுமைதாங்கி மேல் வைத்துவிட்டு ஓய்வு எடுப்பதற்கு என இது உருவாக்கப்பட்டது.

தற்கால சந்ததியினருக்கு சுமைதாங்கியோ, அல்லது அதன் உபயோகங்களோ தெரி யாமல் போயுள்ள நிலையில், அதன் பயன்பாட்டை எடுத்து காட்டும் முகமாக இவ்வாறு வர் ணம் பூசி புனரமைக்கப்பட்டுள் ளது.

தொல்புரம் பகுதியைச் சேர் ந்த ந. யுகதீபன் என்ற இளை ஞனே இவ்வாறு அதனை புனர மைப்பு செய்துள்ளார். (நி-6-104)

# அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயில் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன் கிழமை முற்பகல் 10.30 மணி க்கு கொடியேற்றத்துடன் ஆரம் பமாகவுள்ளது.

தொடர்ந்து பன்னிரெண்டு தினங்கள் இடம்பெறும் உற்ச வத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய தர்ம கர்த்தா சபையினர் அறிவித்துள் ளனர். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 360 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| தக்காளி | 350 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| கோவா | 400 | 400 | 450 | 400 |
| கரட் | 200 | 320 | 400 | 400 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 180 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 550 | 400 | 450 | 600 |
| வெண்டக்காய் | 180 | 160 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 300 | 300 | 250 | 250 |
| லீக்ஸ் | 360 | 360 | 400 | 400 |
| பீற்றூட் | 250 | 280 | 300 | 400 |
| கறிமிளகாய் | 350 | 300 | 250 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 500 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 250 | 350 | 440 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 240 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 500 | 800 | 600 | 600 |
| முள்ளங்கி | 100 | 180 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | — | — |

# 22 கிலோகிராம் முருங்கைக்காய் திருட்டு சந்தேகநபர் விளக்கமறியலில்

(கரணவாய்)

முருங்கை தோட்டத்தில் புகு ந்து இருபத்திரண்டு கிலோகிராம் முருங்கைக்காய்களை திருடிய சந்தேக நபர் ஒருவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத் தித்துறை பதில் நீதிவான் ந.ரஜீவன் உத்தரவிட்டுள்ளார்.

கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடி பகுதியில் உள்ள முருங்கைத் தோட்டம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை அதிகாலை உட் சென்ற திருடன் அங்கிருந்த முருங்கைக்காய்களை திருடி சென்றுள்ளார்.

இந்நிலையில் நெல்லியடிச் சந்தையில் அதனை விற்பதற் காக வந்த திருடனை பொது மக்கள் மடக்கிப்பிடித்து 22 கிலோகிராம் முருங்கைக்காய் களையும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பொலிஸார் சந்தேக நபரை பருத்தித்துறை பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது சந்தேக நபரை இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கு மாறு பதில் நீதிவான் உத்தர விட்டுள்ளார். (நி-6-60)

# வழக்கு ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்ற தீர் ப்பை கேள்விக்கு உட்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாக மக்கள் பிரதிநிதிகள் மீது தொடு க்கப்பட்ட வழக்கு நேற்று திங்கட் கிழமை விசாரணைக்கு எடுக் கப்பட்டு ஜூன் முதலாம் திக திக்கு ஒத்தி வைக்கப்பட்டுள் ளது.

வழக்காளி நகர்த்தல் பத்திரம் ஊடாக 18.01.2021 ஆம் திகதி வழங்கப்பட்ட சாவகச்சேரி நீதி மன்ற தீர்ப்பினை வலிதற்ற தாக்கியதாக காரணம் காட்டி போராட்டத்தில் மக்களோடு இணைந்து செயற்பட்ட முன் னாள் உள்ளூராட்சி சபை உறு ப்பினர்களான கிஷோர், மயூரன் மற்றும் திலக ராணி ஆகி யோரை நீதிமன்றுக்கு அழக் மளிக்குமாறு அறிவித்தல் விடப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று திங் கட்கிழமை காலை வழக்கு சாவ கச்சேரி நீதிமன்ற பதில் நீதி வான் முன்னிலையில் விசார ணைக்கு எடுக்கப்பட்டு மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் முத லாம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் சார் பாக சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலை யாகியிருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பூரண சுதந்திரமடைந்து நேற்றுடன் 51 ஆண்டுகள் பூர்த்தி

(கொழும்பு)

2500 வருடங்களுக்கு அதிகமான வரலாற்றைக் கொண்ட ஆசியாவின் முதலாவது ஜனநாயக நாடாக விளங்கும் இலங்கை, பூரண சுதந்திரமடைந்து நேற்றுடன் 51 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

Ceylon என அழைக்கப்பட்ட எமது நாடு Sri Lanka என மாற்றம் பெற்ற குடியரசு தினம் நேற்றாகும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என 3 தேசங்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த எமது நாட்டை விடுவிக்க இலங்கையர்கள் இரத்தம் சிந்திய வரலாறு மறக்க முடியாதது.

யுத்தத்தினால் வெல்ல முடியாமல் காணப்பட்ட நாட்டை சதிகள், காட்டிக் கொடுப்புகள், ஒப்பந்தங்களின் மூலம் சர்வதேச சக்திகள் எமது நாட்டை ஆக்கிரமித்திருந்தன.

எவ்வாறாயினும், ஆயிரக்கணக்கான உயிர்களின் தியாகத்தின் மூலம் 1948 ஆம் ஆண்டு எமது நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது.

என்றாலும், அரசியலமைப்பு மறுசீரமைப்பின் ஊடாக பிரித்தானியா தொடர்ந்தும் எமது நாட்டில் தமது அதிகாரத்தை தக்க வைத்திருந்தது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்தாலும் அது முழுமையான சுதந்திரமாக அமையவில்லை.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி, புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான வாக்குறுதியுடன் தேர்தலில் களமிறங்கி அதற்கான அதிகாரத்தை வென்றது.

1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து ஆவணமொன்றை உருவாக்கினர்.

இது 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு என அழைக்கப்பட்டது. (நி)

# கனடா பிரதமரின் கருத்துக்கு ஜனாதிபதி மௌனம் காப்பது ஏன்?

## மக்கள் அமைப்பு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முப்படையினரும் பொலிஸாரும் இலங்கையில் தமிழினப் படுகொலையை மேற்கொண்டதாக தெரிவித்துள்ள கருத்தை கனேடியப் பிரதமர் மீளப் பெற வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏன் மௌனம் காக்கின்றார்? என காலி முகத்திடல் மக்கள் அமைப்பு கேள்வியெழுப்பியுள்ளது.




கனேடிய பிரதமரின் கருத்துக்கு எதிர்ப்பினை வெளியிட்டு காலி முகத்திடல் மக்கள் அமைப்பு நேற்று திங்கட்கிழமை கொழும்பிலுள்ள கனடா உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, கடிதமொன்றையும் கையளித்திருந்தது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட காலி முகத்திடல் மக்கள் அமைப்பின் உறுப்பினர் பலங்கொட கஸ்வத்த தேரர், இலங்கையில் முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தமிழ் இனப் படுகொலை செய்துள்ளனர் என கனேடிய பிரதமர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான கருத்துக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பதிலளிக்க வேண்டியதில்லை. மாறாக ஜனாதிபதியும் பிரதமரும் நேரடியாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவித்திருக்க வேண்டும்.

கனேடிய பிரதமரின் ஆதாரமற்ற கருத்துக்களை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். எமது எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இலங்கையில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கனடா அறியாத பல தகவல்களை நாம் இந்தக் கடிதத்தில் உள்ளடக்கியுள்ளோம். தலதாமாளிகை மீதான தாக்குதல்கள், ஸ்ரீமகா போதி தாக்குதல் உள்ளிட்ட தாக்குதல்களால் இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

அந்த சந்தர்ப்பத்தில் தமது குடும்பத்தினரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக குடும்ப அங்கத்தவர்கள் வெவ்வேறு பேருந்துகளில் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களின் காரணமாக எமக்கும் பதில் தாக்குதல்களை நடத்த வேண்டியேற்பட்டது. இறுதியில் அனைத்து இன மக்களும் அழிவை எதிர்கொண்டனர். இவற்றை ஜனாதிபதியும் பிரதமரும் கனடாவுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இவ்விடயத்தில் ஜனாதிபதி ஏன் அமைதி காக்கின்றார்? சிங்கள பௌத்த மக்களை இனவாதிகளெனக் குறிப்பிட்டு எமக்கு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை மறுக்கின்றனர்.

ஜனாதிபதியும் பிரதமரும் இது குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்காவிட்டால் நாம் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று உரிய நடவடிக்கைகளை எடுப்போம். எனவே கனேடிய பிரதமர் வெளியிட்ட கருத்துக்களை உடனடியாக மீளப்பெற வேண்டும் என்றார். (நி)

# வைகாசி மாத இராசி பலன்கள் 15.05.2023-15.06.2023

## கும்பம்

**செயலாற்றல் மிக்கவர்களாக விளங்கும் கும்ப இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே சனிபகவான் சஞ்சரிக்கிறார். ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பொருளாதார நிலையிலும் பற்றாக்குறை ஏற்படலாம். புதிய ஒப்பந்தங்கள் வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள இயலாத சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது குறை கூறுவர். மனக் குழப்பங்கள் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்பு கரையும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எவ்வளவு பாடுபட்டாலும், அதிகாரியின் ஆதரவைப் பெற இயலாது. திறமைக்குரிய அங்கீகாரம் கிடைப்பது அரிது.

### ராகு-கேது சஞ்சாரம்

பின்னோக்கிச் செல்லும் கிரகங்களில், ராகு உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். கேது 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பதவி உயர்வு, ஊதிய உயர்வை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது தாமதப்படும். சில சலுகைகள் உங்களுக்கு மறுக்கப்படலாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் தலைதூக்கும். பாகப்பிரிவினைகளில் குழப்பங்கள் அதிகரிக்கும். தேக நலனில் அக்கறை தேவை. தெய்வ பலம் உங்களுக்கு கை கொடுக்கும். என்றாலும் குறிப்பிட்ட நாளில் சில ஆலயங்களுக்குச் சென்று வழிபட இயலாமல் போகலாம். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்துகொள்ளுங்கள். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் நன்மைகளைப் பெற முடியும்.

### கடக - சுக்கிரன்

வைகாசி 16 ஆம் திகதி கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். குடும்பப் பெரியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய மனை மற்றும் வீடு வாங்கும் முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதற்கான அறிகுறி தென்படும். மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளை வழங்குவர்.

### ரிஷப - புதன்

வைகாசி 18 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - அஷ்டமாதிபதியான புதன், சூரியனுடன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பிள்ளைகளின் மேற்படிப்பு மற்றும் வேலைக்காக வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் அமையும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வும், உத்தியோக உயர்வும் வந்து சேரும். புதியவர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கிடைக்கும். நீண்ட நாளைய எண்ணங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்து ஆதரவு திருப்தி தரும். தொழில் செய்பவர்களுக்கு, தொழில் நடைபெறுவதில் இழுபறி நிலை இருக்கும். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு விலகிச் சென்ற வாய்ப்பு மீண்டும் வந்து சேரும். மாணவர்கள் பாடங்களில் மனதைச் செலுத்தி குறிப்பிட்ட இலக்கை அடைவார்கள். பெண்களுக்கு ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். அசையாச் சொத்துகளை உங்கள் பெயரில் வாங்கும் யோகம் வாய்க்கும். பணவரவு திருப்தி தரும். பணி புரிபவர்களுக்கு யோகமான நேரம் இது.

## மீனம்

**நம்பிக்கையான நண்பர்களைப் பெற்றிருக்கும் மீன இராசி வாசகர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் குரு தனஸ்தானத்தில் இராகுவோடு சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும் விதத்தில் அமையும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். ஏழரைச் சனி தொடங்கிவிட்டதால், படிப்படியாக புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். இடமாற்றமும் வீடு மாற்றமும் இனிமை தரும் விதம் அமையும். ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை.

### ராகு-கேது சஞ்சாரம்

பின்னோக்கி நகரும் கிரகங்களில் இராகு உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திலும் கேது 8 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கின்றனர். தன ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் தனவரவு தாராளமாக வந்து சேரும். குடும்பப் பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். கொடுக்கல் - வாங்கல்களில் சுமுகநிலை உருவாகும். கேது பலத்தால் அலைச்சல் அதிகரிக்கும். வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வந்தாலும், செல்ல முடியாத சூழ்நிலை உருவாகும். வருமானப் பெருக்கத்தை, முன்னிட்டு புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆனால் சர்ப்ப தோஷம் இருப்பதால் அதற்குரிய பரிகாரங்களையும் வழிபாடுகளையும் முறையாகச் செய்வது நல்லது.

### கடக - சுக்கிரன்

வைகாசி 16 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு நீச்சம் பெற்ற செவ்வாயோடு இணைந்து "சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்குகிறார். இதன் விளைவாக பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கடமையைக் கண்ணும் கருத்துமாக செய்வீர்கள். வெளிநாட்டுப் பிரச்சினைகள் அகலும். பெற்றோரின் ஆலோசனைப்படி நடந்து கொண்டு பெருமை காண்பீர்கள். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பொதுவாக நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும் நேரம் இது.

### ரிஷப - புதன்

வைகாசி 18 ஆம் திகதி ரிஷப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 7 க்கு அதிபதியான புதன், சூரியனோடு இணைந்து "புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். இதனால் தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். வெற்றிக்குரிய செய்திகள் வீடு வந்து சேரும். படித்து முடித்து வேலை இல்லாமல் இருக்கும் பிள்ளைகளுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். நூதன பொருள் சேர்க்கை உண்டு. பிரபலமானவர்களின் பின்னணியில் நல்ல காரியங்கள் முடிவடையும். கருத்து வேறுபாடுகள் அகலும். வாரிசுகளின் வளர்ச்சி பெருமைப் படத்தக்கதாக அமையும். உறவினர் வழியில் ஏற்பட்ட பகை மாறும். பொதுவாழ்வில் உள்ளவர்கள் கொஞ்சம் பொறுமையாக செயற்பட வேண்டும். தொழில் புரிபவர்களுக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலிடத்தின் கெடுபிடி அதிகரிக்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்துசேரும். மாணவர்கள் கல்விக்கான உதவி பெற்று பட்ட மேற்படிப்புக்கான வாய்ப்பைப் பெறுவர். பெண்களுக்குத் தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். தனவரவில் இருந்த தடைகள் அகலும். ஏழரைச் சனி நடைபெறுவதால் எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சி தேவை. கணவன் - மனைவி ஒற்றுமைக்கு அனுசரணை அவசியம். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கலாம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 185





நாம் ஒருவேளை தப்பிப் பிழைத்தாலும் கந்தமாறன் கதி அதோகதிதான்!

• தஞ்சைக் கோட்டைச் சுவரை ஓரிடத்தில் வடவாறு நெருங்கிச் செல்வதாக வந்தியத்தேவன் அறிந்திருந்தான். இது வடவாறாகத்தான் இருக்க வேண்டும். வடவாற்றில் அதிக வெள்ளம் அப்போது இல்லையென்றாலும் இந்தக் கோட்டை ஓரத்தில் ஆழமான மடுவாக இருக்கலாம். யார் கண்டது? வேலைத் தண்ணீரில் விட்டு ஆழம் பார்த்தான் வந்தியத்தேவன். வேல் முழுவதும் தண்ணீருக்குள் சென்று முழுகியும் தரை தட்டுப்படவில்லை! ஆகா! என்ன கொடூரமான பாதகர்கள் இவர்கள்! அதைப் பற்றி யோசிக்க இது சமயமில்லை. நாமும் தப்பி கந்தமாறனையும் தப்புவிக்கும் வழியைத் தேட வேண்டும். வெள்ளப் பிரவாகத்தின் ஓரமாகவே கால்கள் சறுக்கி விடாமல் கெட்டியாக அழுத்திப் பாதங்களை வைத்து வந்தியத்தேவன் நடந்தான். தோளில் கந்தமாறனுடனும் கையில் அவனுடைய வேலுடனும் நடந்தான்.

கந்தமாறன் இரண்டு மூன்று தடவை முக்கி முனகியது அவனுடைய நண்பனுக்குத் தைரியத்தையும் மன உறுதியையும் அளித்தது. கொஞ்ச தூரம் இப்படியே சென்ற பிறகு கோட்டைச் சுவர் விலகி அப்பால் சென்றது. கரையோரத்தில் காடு தென்பட்டது. கீழே முட்கள் நிறையக் கிடந்தபடியால் கால் அடி வைப்பதும் கஷ்டமாயிருந்தது.

ஆகா! இது என்ன? ஒரு மரம் ஆற்றில் விழுந்து கிடக்கிறதே! நல்ல உயரமான மரமாயிருந்திருக்க வேண்டும். வெள்ளம் அதனுடைய வேரைப் பறித்துவிட்டது போலும்! பாதி ஆறு வரையில் விழுந்து கிடக்கிறது. அதில் ஏறித் தட்டுத் தடுமாறி நடந்தான். வெள்ளத்தின் வேகத்தில் மரம் அசைந்து கொண்டிருந்தது. மரத்தின் கிளைகளும் இலைகளும் தண்ணீரில் அலைப்புண்டு தவித்தன. காற்றோ அசாத்தியமாக அடித்துக் கொண்டிருந்தது. மரத்தின் நுனிக்கு வந்ததும் வேலை விட்டு ஆழம் பார்த்தான். நல்ல வேளை! முருகன் காப்பாற்றினார்.

இங்கே அவ்வளவு பள்ளமில்லை! வந்தியத்தேவன் மரத்திலிருந்து நதியில் இறங்கிக் கடந்து சென்றான். அங்கங்கே பள்ளம் மேடுகளைச் சமாளித்துக் கொண்டு சென்றான். வெள்ளத்தின் வேகத்தையும் காற்றின் தீவிரத்தையும் தன் மன உறுதியினால் எதிர்த்துப் போராடிக் கொண்டு சென்றான். அவன் உடம்பு வெடவெடவென்று சில சமயம் நடுங்கியது.

தோளில் கிடந்த கந்தமாறன் சில சமயம் நழுவி விழுந்துவிடப் பார்த்தான். இந்த அபாயங்களையெல்லாம் தப்பி வந்தியத்தேவன் அக்கரையை அடைந்தான். கொஞ்ச தூரம் இடுப்பு வரை நனைந்த ஈரத் துணியுடன் ஆஜானுபாகுவான கந்தமாறனுடைய கனமான உடலைத் தூக்கிக் கொண்டு தள்ளாடிச் சென்ற பிறகு. மரநிழலில் சிறிது இடைவெளி ஏற்பட்ட ஓரிடத்தில் கந்தமாறனைக் கீழே மெதுவாக வைத்தான். முதலில் சிறிது சிரமபரிகாரம் செய்து கொள்ள விரும்பினான். அத்துடன் கந்தமாறனுடைய உடம்பில் இன்னும் உயிர் இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்பினான்.

உயிரற்ற உடலைச் சுமந்து சென்று என்ன உபயோகம்? அதைக் காட்டிலும் அக்காவலன் உத்தேசித்தது போல் வெள்ளத்திலேயே விட்டுவிட்டுச் செல்லலாம். இல்லை! இல்லை! உயிர் இருக்கிறது. பெருமூச்சு வருகிறது. நாடி வேகமாக அடித்துக் கொள்ளுகிறது. நெஞ்சு விம்முகிறது.

இப்போது என்ன செய்யலாம்? முதுகிலிருந்து கத்தியை எடுக்கலாமா? எடுத்தால் இரத்தம் பீறிட்டு அடிக்கும். அதனால் உயிர் போனாலும் போய்விடும். காயத்துக்கு உடனே சிகிச்சை செய்து கட்டுக் கட்ட வேண்டும். ஒருவனாகச் செய்யக் கூடிய காரியமல்லவே? வேறு யாரை உதவிக்குத் தேடுவது? சேந்தன் அமுதனுடைய நினைவு வந்தது.


(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

(நேற்றைய தொடர்ச்சி...)

## யானை பல் விளக்குமா?



விடிந்தால் அரையாண்டுத் தேர்வு. அப்பு புலம்பிக் கொண்டே இருந்தான். அவனால் வலியைத் தாங்க முடியவில்லை.

ஆசிரியர் அவனை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் படி கூறினார்.

அடுத்த நாள்மதுரையில் அப்புவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

“பல்வலிக்கு காரணமாக இருந்த சொத்தைப் பல்லை உடனடியாக எடுக்கவில்லை என்றால் உயிருக்கே ஆபத்து” என்றார் மருத்துவர்.

அப்பு அரையாண்டுத் தேர்வுக்கு போக முடியவில்லையே என்று அழுது கொண்டிருந்தான்.

“தினந்தோறும் பற்களை சுத்தம் செய்தால் இப்படிப்பட்ட பிரச்சினையெல்லாம் வரவே வராது” என்றார் மருத்துவர்.

அப்பு ஒருவாரம் மருத்துவமனையில் இருந்தான்.

அரையாண்டுத் தேர்வு முடிந்து அன்றுதான் பள்ளிக்கூடம் திறந்தது.

அன்று வகுப்பில் ரேங்க் கார்டு கொடுக்கப்பட்டது. “முதல் மார்க் ரங்கராஜன்” என்று ஆசிரியர் பெயரைப் படித்த போது அப்பு தேம்பி அழுதான். ஆசிரியர் அவனை சமாதானப் படுத்தினார்.

“சுவற்றை வைத்துதான் சித்திரம் எழுத வேண்டும் நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொண்டால்தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முயும்” என்றார். அப்பு மௌனமாக இருந்தான்.

அடுத்தநாள் அவன் பள்ளிக்கு “பளிச்” என்று வந்தான்.

“அழுக்குமாமா இப்போ உஜாலாவுக்கு மாறிட்டாண்டா” என்று ஒருவன் சொல்ல பையன் “கொல்” லென்று சிரித்தனர்.

அப்புவுக்கும் சிரிப்பு வந்தது

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இரு வகை நூல் இருக்கும். நன்மை, தீமையே அவை.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்.மாவட்ட அரச அதிபரின் அறிவிப்பால் அகமகிழ்ந்தோம்!

தனியார் வகுப்புகளுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை வழங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண அரச அதிபரின் இந்த அறிவிப்பு உண்மையில் வரவேற்கப்பட வேண்டியது.

ஏனெனில் கல்வி என்பது வாழ்வதற்கானது. ஆனால் எங்கள் தாயகத்தில் அதிலும் குறிப்பாக வட மாகாணத்தில் கல்வி என்பது நெருக்கீடு தருகின்ற ஒரு விடயமாக மாறிவிட்டது.

படி... படி... எனப் பெற்றோர்கள் கூறுவது நச்சரிப்பாக மாறிவிட்டது.

இதனால் பிள்ளைகளின் பூப்போன்ற மனங்கள் வக்கிரமடைந்துவிட்டன.

பாடசாலை, தனியார் கல்வி நிறுவனங்கள் என மாறி மாறி கல்விச் சுமை மாணவர்களிடம் ஏற்றப்படுகிறது.

உறவினர்களின் வீடுகளுக்குக் குடும்பமாகச் சென்று உறவு பாராட்டுவது.

நண்பர்களுடன் கதைத்து நட்புப் பாராட்டுவது.

அயல் அட்டத்துடன் அன்பாகப் பழகுவது. சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், பொது அமைப்புகள் என்பவற்றுடன் ஈடுபாடு கொள்வது என எதுவும் இல்லாமல் தனித்து படிப்பு என்ற சுமை மாணவர்களின் தலைகளில் ஏற்றப்பட, அவர்கள் விரக்தியடைந்து பிறழ்வான பழக்கங்களுக்கு உட்படுகின்ற பரிதாப நிலைக்கு ஆளாகுகின்றனர்.

இதுதவிர, பெற்றோர்களை உதாசீனம் செய்கின்ற போக்கும் பெரியவர்களை மதிக்காத தன்மையும் மற்றவர்களுடன் அன்பாகப் பழக முடியாத மனநிலையும் ஏற்பட்டுவிட, ஈற்றில் விரக்தி மட்டுமே எஞ்சி ஒன்றில் வீடுகளுக்குள் முடங்குகின்றனர். அல்லது வீதிகளில் நின்று அட்டகாசம் புரிகின்றனர்.

இதுவே உண்மை. இந்த உண்மை உணரப்பட்டால், அதற்கான பரிகாரம்; கிழமையில் ஒரு நாளேனும் அதாவது ஞாயிற்றுக்கிழமையேனும் தனியார் வகுப்புகளை நடத்தாமல் வீடுகளில் பெற்றோர்களுடன் பிள்ளைகள் இருந்து மனதுக்கு விருப்பமான உணவுகளைத் தயாரித்து உண்டு மகிழவும்

குடும்பமாக வெளியில் சென்று மனநெருக்கடிகளைக் களைந்து புத்துணர்வு பெறவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்த யதார்த்தமான உண்மையை எங்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் அவர்கள் புரிந்து கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு விடுமுறை வழங்குவதற்கான முயற்சி எடுக்கப்படுமெனக் கூறியிருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

ஆம், இதுகாறும் மனதை உறுத்திக் கொண்டிருந்த ஒரு விடயத்தை வெளிப்படுத்திய எங்கள் யாழ்ப்பாண அரச அதிபர் அவர்கள், தனியார் கல்வி நிறுவனங்களுடன் கதைத்து அவர்களின் ஒத்துழைப்புடன் ஞாயிறு தோறும் தனியார் வகுப்புக்களுக்கு விடுமுறை வழங்க ஆவன செய்தால், அது எங்கள் பிள்ளைகளை – பெற்றோர்களை – சமூகத்தை நிச்சயம் ஆற்றுப்படுத்தும்.

எங்கள் எதிர்காலச் சந்ததியை ஆரோக்கியமாக வாழவைக்கும். இது சத்தியமான உண்மை.

## மீனவர்களுக்கு இலவச மண்ணெண்ணெய் விநியோகம்

(கொழும்பு)

சீனாவினால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

அண்மையில் சீன அரசினால் இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கும் வைபவம் இன்று காலை 8மணிக்கு பாணந்துறை கடற்றொழில் துறைமுகத்தில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷென் ஹொன் ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மண்ணெண்ணெயில் இயங்கும் 26,000 மீன்பிடிப் படகுகளுக்கு தலா 150 லீற்றர் வீதம் இதன்போது விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி)

## கடவுச்சீட்டுக்களை இனி விரைவாகப் பெறலாம்

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்களை தாமதமின்றி பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டிற்காக 50 புதிய நிலையங்கள் ஜூன் மாத இறுதிக்குள் நிறுவப்படவுள்ளன.

இதன்மூலம், இந்த வருட இறுதிக்குள் கடவுச்சீட்டுகளை துரிதமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

புகைப்படங்கள் மற்றும் கைரேகைகளை சேகரிப்பதற்காக ஐம்பது மாவட்ட செயலகங்களில் புதிதாக 50 நிலையங்கள் நிறுவப்படும் என அவர் கூறியுள்ளார்.

தேசிய அடையாள அட்டைகள் வழங்குவதற்கு மேலும் ஐந்து கிளைகள் இதனுடன்சேர்ந்து இணைக்கப்பட்டவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடவுச்சீட்டு வழங்கும் புதிய நடைமுறை மூன்று நாட்களுக்குள் அறிமுகப்படுத்தப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## பிஸ்கட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில் பிஸ்கட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது, நாடு முழுவதும் பிஸ்கட் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, பிஸ்கட் விலை 8 சதவீதம் தொடக்கம் 15 சதவீதம் வரை குறைக்கப்படும் என்று பிஸ்கட் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், புதிய விலையில் பிஸ்கட்களை சந்தைக்கு வெளியிடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் பிஸ்கட் நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. (நி)

## வாக்கு சீட்டுக்கள் அச்சிடும் பணி தனியார் வசம்

வாக்குச் சீட்டுக்கள் உட்பட தேர்தலின் போது செய்யப்படும் அனைத்து அச்சிடும் பணிகளையும் தனியாரிடம் ஒப்படைப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாகதேர்தல்ஆணையம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்க அச்சகம் போன்ற நிறுவனங்கள் இடையூறு ஏற்படுத்தியதன் காரணமாக எதிர்வரும் தேர்தலில் அச்சடிக்கும் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் அரசாங்க அச்சகத்தினால் மேற் கொள்ளப்படும் அச்சுப் பணிகளுக்கு பணம் பெறும் முறை தொடர்பிலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா சுருத்து வெளியிட்டார். (4,7,9)

## போதைப்பாவனைக்கு அடிமையானவர்களுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வால் பாதிப்பில்லை

### தவறாக கருத்துக்கள் பரப்பப்படுகின்றன என்கிறார் உளநல மருத்துவர்

(தருமபுரம்)

மது மற்றும் போதை வஸ்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் புனர்வாழ்வு தொடர்பாக சிலரால் பரப்பப்படும் தகவல் உண்மைக்கு புறம்பானது என உளநல மருத்துவ அதிகாரி ஜெயராஜா தெரிவித்தார்.

மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உளவளத்துணை மற்றும் உளவளத் துணை சார்ந்து பணிபுரிவோருடனான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துகள் வழங்கிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மது மற்றும் போதை வஸ்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தருமபுரம் பகுதியில் 14 நாட்கள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு புனர்வாழ்வு பெற்றவர்கள் தொடர்பில் நாம் தொடர்ச்சியான கண்காணிப்பினை மேற்கொண்டு வருகின்றோம். புனர்வாழ்வு அழிக்கப்பட்ட பலர் சமூகத்துடன் இணைந்து ஒழுக்கத்துடன் வாழ்கின்றனர்.

புனர்வாழ்வு பெற்றவர்களில் 10 பேர் தொடர்பாக ஒரு வருட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் மூவர் மது அருந்தாமலும் நால்வர் முன்பை விட குறைந்தளவு மது அருந்துபவர்களாகவும் இருவர் முன்பை விட அதிகளவு மது அருந்துபவர்களாகவும் மேலும் ஒருவர் இயற்கை எய்தியவராகவே? அல்லது தக்வல் பெற முடியாதவராகவே? உள்ளனர்.

சமூகத்தில் புனர்வாழ்வு பெற்று திருந்தி வாழ்வோர் தொடர்பான தகவலை விடவும் புனர்வாழ்வு பெற்றவர்கள் அதிகம் குடிக்கின்றார்கள், இறக்கின்றார்கள் போன்ற தகவலே வேகமாக பரவிக் காணப்படுகின்றது.

இது உண்மைக்கு புறம்பான செய்தியாகும். மது மற்றும் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வு பெறுவதன் மூலம் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. எம்மிடமிருக்கும் வளங்களை கொண்டு போதைப்பொருள் பாவனைகளால் பாதிக்கப்பட்டவர்களை நல்வழிப்படுத்துவதற்கான செயற்பாடுகளையே மேற்கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-6-316)

## நிறுவை கருவிகளுக்கு முத்திரையிடல் வேலைத்திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களில் பொருட்கொள்வனவில் ஈடுபடும் நுகர்வோரினை பாதுகாக்கும் வகையில், வர்த்தக நிலையங்களில் உள்ள நிறுவை அளவு கருவிகளுக்கு முத்திரை பதிக்கும் வேலைத்திட்டம் நாளை, நாளை மறுதினம் கண்டாவளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வருடந்தோறும் தராசுகள் மற்றும் அளவை பொருட்களுக்கு முத்திரையிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், 2023 ஆம் ஆண்டிற்கான தராசுகளுக்கான முத்திரையிடல் வேலைத்திட்டமாக இது அமையவுள்ளது. இதன்போது, 12 மாதங்களாக பகுதியில் முத்திரையிடாத கண்டாவளை பிரதேசத்தை சேர்ந்த வர்த்தகர்கள் தராசுகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் முத்திரை இடப்படாத தராசுகள் பாவனைக்கு முற்றாக தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், வருடாந்தம் இந்த முத்திரையிடும் பணிகளை அளவீட்டு அலகுகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

மேலும் இவ்வாறு முத்திரையிடப்படாது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும்நபர்கள்மீது 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I



15

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**வீச்சுவலை மீன்பிடிப்பு**

வீச்சு வலையும் (சாதாரண வலை) ஒரு நூற்றாண்டை விடப் பழைமை வாய்ந்த (எறிதல் வகை) மீன்பிடி உபகரணமாகும். வீச்சு வலையால் (படம்-1)சிறிய மீன்களையும் இறால்களையும் பிடிப்பார்கள். கடற்கரைக்கு அண்மையிலுள்ள கடலிலும் நீர்த் தேக்கங்களிலும் வீச்சுவலை ஓர் உபகரணமாகப் பயன்படுத்தப் படுகிறது. இது ஒரு கூம்பினை

யைப் பயன்படுத்திக் கொண்டு இயந்திரப் படகுகள் மூலம் மீன்களைப் பிடிப்பார்கள் கடற்கரையில் இருந்து 7 மைல்களுக்கு அப்பால் உள்ள கடலில் மாத்திரமே இவ் வலையால் மீன்களைப் பிடிக்க அனுமதியுண்டு.

இலங்கையில் தென் மேல் பகுதியில் உள்ள கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் வாழும் மீனவர்கள் இம் முறையைக் கையாண்டு ஒக்டோபர் தொடக்கம் ஏப்ரல் வரை மீன்களைப் பிடித்தா

**களங்கண்டி மீன்பிடி**

மிக இலகுவான மீன்பிடித் தொழிலாக களங்கண்டி மீன்பிடி முறையுள்ளது. களங்கண்டி மீன்பிடி ஆழமற்ற குடாக்கடல்களிலேயே செய்ய முடியும். கரையோரங்களிலோ, ஆழமற்ற கடனீரேரிகளிலோ ஓரிடத்தில் கம்பங்களை நட்டு வேலி போன்று வலைகளால் பிணைத்து ஒருவகைப் பொறியை அமைப்பர்.

பத்துப் பதினைந்து நாட்களுக்கு நிலையாக அமைக்கப்பட்டிருக்கும். களங்கண்டிக்குரிமையான மீனவன் காலையில் அவ்விடத்திற்குச் சென்று களங்கண்டியில் சிக்கிய மீன்களைப் பிடித்து வருவான். இது மீன்பிடி முறைகளில் மிக எளிதும் ஓய்வும் தரும் முறையுதுவொன்றே. களங்கண்டி வலைகள் களவாடப்படுவதே இம் முறையிலுள்ள ஒரேயொரு பெருங்குறையாகும்.


சாதாரண வலையில் மீன்பிடித்தல்
படம்-1


தள்ளு வலை (Push Net) படம்-a1

ஒத்த வடிவமுடைய வ்ட்டமான வலையாகும். இதன் திறந்த அந்தம் வட்டமானது.

அவ்வந்தத்தில் ஈயத்துண்டுகள் கட்டப்பட்டிருக்கும். வலையின் தலைப் பகுதியில் ஒரு கயிறு காணப்படும். இவ்வலை பூரணமாக விரியும் வண்ணம் இதனை எறிவதற்கு நல்ல தேர்ச்சி அவசியம். வலையை வீசுவதன் மூலம் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் உள்ள மீன்கள் அடைக்கப்படும்.

அதனை அடுத்து வலையின் தலைப் பகுதியில் உள்ள கயிற்றினை இழுத்து ஈயத்துண்டுகளைக் கொண்ட பகுதி அடிப்பாகத்தில் இருந்து மேலெழாதவாறு அப்பகுதியை ஒருங்கு சேர்க்க வேண்டும்.

**தள்ளுவலை**

ஆழம்குறைவான நீர் நிலைகளின் அடியில் தள்ளுதல் மூலமாக இறால்குஞ்சுகளைப் பிடிப்பதற்குதள்ளுவலை (படம்-a1) பயன் படுத்தப்படும். நீர்நிலையின் அடிப் புறத்தில் பாதிப்பு ஏற்படுவதனால் இதுதடைசெய்யப்பட்டுள்ளது. இது இயங்கு நிலைச்சாதனமாகும்.

**லைட்கோஸ் வலைகள்**


லைட் கோஸ் வலையால் ஒளி

ர்கள்.

இவ்வலை சுமார் 200 மீற்றர் நீளமுடையது. சுமார் 50 மீற்றர் ஆழத்தில் வலை செங்குத்தாக, அதேசமயம் சற்று வட்டமாக இடப்படும். மீனவர்கள் மாலையில் வலைகளைக் கடலில் வெகு தூரம் வரை கொண்டு சென்று, இரவில் மீன்களைப் பிடிப்பார்கள்.

மீன்களை ஒருங்கு திரட்டுவதற்காக மின்விசையால் இயக்கப்படும் 500 வோல்ற் கொண்ட 3 மின் குமிழ்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள். மீன்கள் ஓரிடத்தில் ஒன்று கூடிய பின்னர் 40/50 வோல்ற் கொண்ட மின்குமிழையுடைய விளக்கினை நீரின் அடியில் எரிய விடுவார்கள். மீன்கள் இவ்விளக்கினைச் சூழ்ந்து கொண்ட பின்னர் ஏனைய மின்விளக்குகளை ஒவ்வொன்றாக அணைத்து விடுவார்கள். அதனை அடுத்து நீரினுள் இருக்கும் விளக்கு மத்தியில் இருக்கத்தக்கதாக வலையைக் கவனமாகச் சேர்ப்பார்கள். பின்னர் மீன்களைப் படகினை நோக்கி இழுப்பார்கள்.

தற்போது இவ்வுபகரணம் தடை செய்யப்பட்டுள்ளது. சிறிய அளவில் மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் இம்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையே மேற்படி தடைக்குக் காரணமாகும்.


கட்டுவலை
படம்-அ


வலைப் பொறிக்குள் நுழைகின்ற மீன்கள் வெளியே வரமுடியாதவாறு இது அமைக்கப்படும்.

இது படத்தில் (படம்-அ) காட்டியவாறு பல்வேறு வடிவங்களில் நிர்மாணிக்கப்படும். இவ் வலை சில இடங்களில் பட்டிவலை எனவும் அழைப்பர். இவ்வலை நீரோட்டத்தின் இயல்புக்கேற்ப நிர்மாணிக்கப்படுகின்றது. இவ் வலையில் வேலிவலை, சிறுகுடா, பெருங்குடா, பட்டி எனப் பலபகுதிகள் உண்டு.

ஒரு களங்கண்டி ஓரிடத்தில்

முன்னர் கூறியது போன்று, களங்கண்டித் தொழில் எல்லாக் கடல்களிலும் செய்யக்கூடியதன்று. ஆழங்குறைந்த, அமைதியான கடல்களிலேயே இத்தொழில் செய்யமுடியும். 4 அடி முதல் 12 அடி வரை ஆழமுள்ள கடல் பரப்பிலேயே இத் தொழில் செய்யமுடியும்.

அதனால் வட இலங்கையில் சில குறித்த பகுதிகளிலேயே இத் தொழில் நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணக் கடனீரேரியில் பாஷையூர், கரையூர் என்னும் பகுதிகளில் இத் தொழில் நடைபெறுகின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அவர் இன்று சிங்கப்பூர் நோக்கி விஜயம் செய்யவுள்ளார்.

அத்துடன் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையில் ஜப்பானிற்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது ஜப்பான் பிரதமருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-7,9)

## மக்களின்...

கோரிக்கைகளை முன்வைத்திருந்தார்கள். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்கு தீர்வு பெற்றுத் தருமாறு கூறியிருக்கின்றார்கள்.

எனவே அந்த விடயத்தினை நான் சரியான முறையில் அணுகி அதற்கு தீர்வுகளை பெற்று தருவதற்கு முயற்சிப்பேன். மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து மதங்களும் தங்களுடைய தனித்துவமான மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

அந்த வகையில் அதற்கான சகல ஏற்பாடுகளையும் எடுக்க நான் முயற்சிக்கின்றேன். அதேபோல வட மாகாண அவைத்தலைவர், மாகாண மக்கள் குறிப்பாக யாழ்.மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக்கூறியிருந்தார்.

ஏற்கெனவே பாலியாறு சம்பந்தமான ஒரு பிரேரணையை தாங்கள் தயாரித்து வைத்திருப்பதாகவும் அதை முன்னெடுத்து செல்லுமாறும் கூறியிருக்கின்றார். யாழ்ப்பாண மக்களுக்கு நீண்ட காலமாக இருக்கின்ற குடிநீர் பிரச்சினையை நான் உணர்ந்திருக்கின்றேன்.

நான் கூட இங்கு வருகின்றபோது குடிநீர் பிரச்சினையை தனிப்பட்ட ரீதியான பிரச்சினையாக உணர்ந்திருக்கின்றேன். எனவே அந்த பிரச்சினையை தீர்க்க முக்கியமாக கவனம் எடுப்பேன் எனவும் தெரிவித்தார். (4-7,9,33)

## கடமைகளை...

வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ள்ஸ் நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வில் வட மாகாண முன்னாள் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர், இராணுவத்தினர், மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடமாகாண திணைக்கள, அமைச்சுக்களின் செயலாளர்கள், பதிப்பாளர்கள் மற்றும் ஆளுநர் செயலக உத்தியோகத்தர்கள், மதத்தலைவர்கள் ஊடகவியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-7,9,33,104)

## ரூபாயின்...

மேலும் இந்த காலகட்டத்தில், இலங்கை ரூபாய் பல முக்கிய வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பை காட்டியுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (4-7,9)

## விகாரையை...

குறித்த போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் மற்றும் ஊடக பேச்சாளர் சுகாஷ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-7,9)

## நிலஅளவை...

நிர்வாகத்தினர் அமைச்சரிடம் முறையிட்டிருந்த நிலையில், அதனை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று நிலைமைகளை தெளிவுபடுத்தியதன் விளைவாக நில அளவைப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

ஆலய நிர்வாக சபை உறுப்பினர்கள், பக்தர்கள், உள்ளூர் மக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார். (4-7,9)

## தமிழர்களின்...

டி.பி, ரெலோ போன்ற அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்தே காணப்பட்டது.

அவ்வாறு விடுதலைப் புலிகளுடன் வேறு சில அமைப்புக்கள் ஒன்றிணைந்து இருந்த காலப்பகுதியில் பௌத்த விகாரைகள் உடைக்கப்பட்டன.

அதை நேரடியாக விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் எனக் கூற முடியாது. அதனை யார் செய்தார்கள் என புரிந்தே கூறுதல் வேண்டும்.

விடுதலைப் புலிகள் நினைத்திருந்தால் அவர்களது தனியான 14 வருட காலப்பகுதியில் வெடியரசன் கோட்டை போன்றவற்றை இல்லாது செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

அது மட்டுமன்றி புத்தர் இந்து முறைப்படி வாழ்ந்தவர் என்பதால் சிங்கள பௌத்தம் எனக் கூறுதல் தவறானது.

உண்மையில் பௌத்தம் வேறு எனவும் சிங்களம் வேறு எனவும் தெரிவித்துள்ளார். (4-7,9)

## இருவேறு இடங்...

இதேவேளை காலி பொலிஸ் பிரிவில் வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தேங்காய் வியாபாரியான குறித்த நபர், நேற்றுக் காலை வீதியோரத்தில் தேங்காய்களை விற்றுக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அவர் ஏழு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (4-7,9)

## விசேட...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தென் மாகாணத்தின் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய 3 மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது 19 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சந்தேக நபர்களிடமிருந்து பல்வேறு வகையான போதைப் பொருட்கள், கூரிய ஆயுதங்கள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், ரி56 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள், இராணுவ சீருடைகள் உள்ளிட்டவை மீட்கப்பட்டுள்ளன.

58 வீதித் தடைகள், 24 நடமாடும் சோதனைகள், 25 மோட்டார் சைக்கிள் மூலம் சோதனை நடவடிக்கைகள், 186 வீடுகள், 1,080 வாகனங்கள் மற்றும் 2,436 பேரிடம் இவ்வாறு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (4-7,9)

## மன்னார்...

பௌத்த விகாரைகள் உள்ளன. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் ஆகிய இடங்களில் அவை உள்ளன.

ஆனால், இங்கே பௌத்த குடும்பங்கள் ஐம்பது கூட இல்லை. பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து வருகிறது.

இதேவேளை குறித்த விடயம்தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார். (4-7,9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1577
கும்பம் 8 6 9 4 8 7

தன நிதானய
திகதி - 2023.05.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1152
W 14 25 28 49

கொவிசெத
திகதி 2023.05.22
சீட்டிழுப்பு இலக்கம் 3364
T 44 53 55 68

மெகா பவர்
திகதி 22/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1470
G 19 19 32 36 75

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.22
சீட்டிழுப்பு இலக்கம் 431
கன்னி 11 12 29 30 கன்னி

மஹஜன சம்பத
திகதி 2023/05/22
சீட்டிழுப்பு இலக்கம் 5122
L 6 3 5 7 2 8

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2096
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.05.22
தினம் திங்கட்கிழமை
L 36 56 60 62
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,564,640/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.22
வெற்றி வாரம்: 4257
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,161,958.20
23 35 42 43 S

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,530,974/-
திகதி 2023-05-22
வெற்றி வாரம் 3808
வர்ணம் மஞ்சள்
18 43 54 58
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,037,300/-

அங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 15 14 47 56 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 331,824,859.40
சீட்டிழுப்பு வாரம் 1272
2023.05.22 திங்கள்

ஜயோதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.05.22
வெற்றி வாரம்: 1923
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,124,490.40
24 28 39 57 Y

அத கோடிபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1922
சீட்டிழுப்பு திகதி: 2023.05.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 51,237,931.20
23 41 44 51 P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

### கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய சாமான்கள், சில்வர் சாமான்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், க்வரிங் வகைகள், தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெயிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், பெர்ஸ் வகைகள், அன்பளிப்பு பொருட்கள் மணிக்கூட்டு வகைகள்

**இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.**

என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (15712)

### சரவணபவன் பான்சி ஹவுஸ்

26/1 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.

உரிமையாளர்

தே.கலைத்தாசன் (கரன்) 021 315 5900



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கீரிமலையில் 48 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- கீரிமலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- கீரிமலை சிவன் கோவில் (நகுலேஸ்வரம்) இருந்து1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
- காணியின் வடக்கு எல்லை – கடல், தெற்கு எல்லை – பிரதான காபற் வீதி முகப்பு (மாதகல் – கீரிமலை).

(15711)

**076 911 9371**
**077 874 8135**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 42 பரப்பு காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- யாழ் நகரில் இருந்து 1 ½ km தூரத்தில்.
- நான்கு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15711)

**077 638 5683, 076 755 8606, 077 259 0391**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 20 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15711)

**076 788 0591**
**076 733 6047**



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15711)

**076 436 5814**
**077 065 4525**



## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்

(15537)

077 544 8503



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA: STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6602)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.

V2 TRAVELS

0777-068-777



## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-6602)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


## நடிகர் சரத்பாபு நேற்று காலமானார்



பிரபல நடிகர் சரத்பாபு உடல்நலக் குறைவு காரணமாக 71 ஆவது வயதில் நேற்று மருத்துவமனையில் காலமானார்.

கடந்த சில வாரங்களாக அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருந்து வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி சரத்பாபு நேற்று உயிரிழந்தார்.

இவரது மறைவுக்கு இந்திய பிரதமர் மோடி, ரஜனி. கமல் உள்ளிட்ட பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

(4.7.9)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15587)

076 825 7716 (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 076 559 3322 (15708)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 03 . 1947

மறைவு 15 . 05 . 2021

அமரர்

### திருமதி இராசம்மா துரைச்சாமி

திதி : 23.05.2023

நான் பார்த்த முதல் முகம்!
நான் பேசிய முதல் வார்த்தை!
நான் மறக்க முடியாத முதல் ஓவியம்
என் அம்மா!
இரண்டு ஆண்டுகள் ஆனதம்மா
என் மனமோ இன்னும் ஆறவில்லை
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உன் நினைவுகளைச் சுமந்தவனாய்
இருப்பேன் அம்மா!
நீங்கள் சென்ற தேசமதில் நிலையான
அமைதி கொள்ள வேண்டுகின்றேன் அம்மா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துரைராசம் ஒழுங்கை,
பாரதி வீதி,
பத்தமேனி அச்சுவேலி. (15596)

என்றும் உங்கள் நினைவுடன்
அன்பு மகன் உதயன்
T.P : 076 547 7722

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.